மாகாணக் கல்வித் திணைக்களம் - வடக்கு மாகாணம்

தரம் - 06 | கணிதம் | நேரம் - 2 மணித்தியாலம்


சுட்டெண் - | புள்ளி -

பகுதி 1

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

1. கூட்டுக.8+2

2. காட்டப்பட்ட வட்டத்தின் மீது புள்ளி A இனை குறித்துக் காட்டுக?



3. சிறிய வட்ட அலங்காரம் ஒன்று வரைக?

4. 7248 எனும் எண்ணின் நூறாமிடத்து இலக்கம் யாது?

5. 7248 இல் 7 குறிக்கும் பெறுமானம் யாது?

6. ரூபா 120 கொடுத்து ரூபா 80 பெறுமதி உள்ளபுத்தகத்தைவாங்கியவருக்குகிடைக்கும்மீதியாது?

7. 3 நிமிடங்கள் 20 செக்கன்கள் என்பதை செக்கன்களில் தருக?

8. வகுப்பொன்றில் 24 ஆண் பிள்ளைகளும் 18 பெண் பிள்ளைகளும் உள்ளனர். வகுப்பில்உள்ள மொத்த மாணவர்களின் எண்ணிக்கை யாது?

9. பெருக்குக.36×8

10. வகுக்குக.$216 \div 6$

11. ஒரு வருடத்தில் எத்தனை மாதங்கள் உள்ளன?

12. 220 இனை 6 ஆல் வகுக்கும்போது மீதி யாது?

13. 136 இனை கிட்டிய 10 இன் மடங்கிற்கு மட்டந்தட்டுக?

www.lkedu.lk

14. உப திசைகள் 4 உம் எவை?

15. பிற்பகல் 6.15 இனை நியம நேரத்தில் தருக?

16. 12 ம் திகதி மாசி மாதம் 2018 ம் ஆண்டு இனை சர்வதேச நியம முறையில் எழுதிக்காட்டுக?

17. ஒரு நாள் எத்தனை மணித்தியாலங்களைக் கொண்டது?

18. +4 ற்கும் -2 ற்கும் இடையில் உள்ள எண்களை எழுதுக?


19. கிட்டிய 10 ற்கு மட்டந்தட்டும்போது 50 கிடைக்கும் சிறியஎண் , பெரிய எண் யாது?

20. பாடசாலை ஒன்றில் விளையாட்டுப்போட்டி பிற்பகல் 1.30 ற்கு ஆரம்பமாகி பிற்பகல் 6.15 ற்கு நிறைவடைந்தது எனில் எடுத்த காலத்தைக் காண்க?

பகுதி 2

எல்லா வினாக்களுக்கு விடை தருக

வினா இல 1



மேலே காட்டப்பட்ட படத்தை அவதானித்து கீழே தரப்பட்ட வினாக்களுக்கு விடை தருக.

1. 0 ற்கு பிரதான திசைகளில் உள்ள ஆங்கில எழுத்துக்கள் எவை?

2. 0 ற்கு தென்மேற்கு திசையில் அமைந்துள்ள புள்ளி யாது?

3. B ற்கு தெற்கே அமைந்துள்ள புள்ளி யாது?

www.lkedu.lk


4. D ஆனது 0 ற்கு எத் திசையில் அமைந்துள்ளது?

5. P ஆனது 0 ற்கு எத் திசையில் அமைந்துள்ளது?

5. D ற்கு வடக்கே அமைந்துள்ள புள்ளி யாது?

(6 × 2 = 12புள்ளிகள்)

வினா இல 2



மேலே காட்டப்பட்டுள்ள நேர்கோடுகளால் ஆக்கப்பட்ட உருவை அவதானித்து கீழே தரப்பட்ட வினாக்களுக்கு விடை தருக.

1. கோணம் b எவ் வகையான கோணம்?

2. விரிகோணத்தைக் குறிக்கும் எழுத்து யாது?

3. கூர்ங்கோணத்தைக் குறிக்கும் எழுத்து யாது?

4. நேர்கோணம் ஒன்றை வரைந்து eகுறித்துக் காட்டுக?

5. d குறிக்கும் கோணவகை யாது?

6. கடிகாரம் ஒன்றில் 12.15 மணி குறிக்கும் கோண வகை யாது?

(6 × 2 = 12புள்ளிகள்)

வினா இல 3

1. கூட்டமொன்றில் 908 பேர் பங்குபற்றினார்கள். அவர்களில் 599 பேர் ஆண்களாவார். கூட்டத்தில் பங்குபற்றிய பெண்களின் எண்ணிக்கை யாது?

2. வங்கி ஒன்றில் நிசா 8756 ரூபாவையும் ரதி 6859 ரூபாவையும் ரவி 7200 ரூபாவையும் வைப்புச் செய்திருந்தனர். மூவரும் மொத்தமாக வைப்புச் செய்த தொகை யாது?

3. 768×64 பெருக்குக?

www.lkedu.lk

4. 3672 18 வகுக்குக?

(3 × 4 = 12 புள்ளிகள்)

வினா இல 4

1. 736 இல் 3 குறிக்கும் இடம் யாது?

2. 8756 இல் 7 குறித்து நிற்கும் பெறுமானம் யாது?


3. 40204234620 என்ற எண்ணை வலயங்களாக பிரித்து எழுதுக?

4. 60 000 004 என்ற எண்ணை சொற்களில் எழுதுக?

5. ஆறு பில்லியன் இருபத்துநான்கு மில்லியன் எழுநூற்று ஐத்தாயிரத்து நூற்று இருபத்துநான்கு என்பதை இலக்கத்தில் எழுதுக?

(2 + 3 + 3 + 2 + 2 = 12 புள்ளிகள்)

வினா இல 5



1. மேலுள்ள எண்கோட்டில் p, q, r குறித்து நிற்கும் புள்ளிகளை எழுதுக?
   p - q - r -

2. A= (-3) B= 0 எனும் புள்ளிகளை மேலே உள்ள எண்கோட்டில் குறிக்குக?

3. மேலே எண்கோட்டில் குறிக்கப்பட்ட புள்ளிகளில் மிகச் சிறிய எண்ணைக் குறிக்கும் எழுத்து யாது?

4. பொருத்தமான சமனிலிக்குறியீடுகளை இடுக.
   i. (3) -------- (2)
   ii. 0 ---------- (-2)
   iii. (-4) -------(-12)

(3 + 2 + 2 + 1 + 2 + 2 = 12 புள்ளிகள்)

www.lkedu.lk